இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

நீங்கள் உங்கள் காதால் தொடர்ந்து கேட்டும் கருத்தில் கொள்வதில்லை. உங்கள் கண்களால் பார்த்துக்கொண்டேயிருந்தும் உணர்வதில்லை. இம்மக்களின் நெஞ்சம் கொழுத்துப்போய்விட்டது; காதும் மந்தமாகி விட்டது. இவர்கள் தம் கண்களை மூடிக்கொண்டார்கள்; எனவே கண்ணால் காணாமலும் காதால் கேளாமலும் உள்ளத்தால் உணராமலும் மனம் மாறாமலும் இருக்கின்றார்கள். நானும் அவர்களைக் குணமாக்காமல் இருக்கிறேன்.' (மத் 13:13-15)

# குடும்பங்கள் அன்பு, மதிப்பு, தோழமையைக் கொண்டிட வேண்டுவோம்

## -திருத்தந்தை வேண்டுகோள்

**வத்திக்கான்** : இன்றையக் குடும்பங்கள், அன்பு, மதிப்பு, மற்றும், வழிகாட்டல் ஆகியவற்றின் தோழமையை, குறிப்பாக, அவை அரசிடமிருந்து பாதுகாப்பைப் பெற்றிடுமாறு இந்த ஜூலை மாதத்தில் சிறப்பாக மன்றாடுவோம் எனத் திருத்தந்தை பிரான்சிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்றையக் குடும்பங்கள், அன்பு, மதிப்பு, மற்றும், வழிகாட்டல் ஆகியவற்றின் தோழமையைப் பெற்றிடுவது இன்றியாமையாதது. என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒரு காணொளிச் செய்தி வழியாக கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜூலை மாதச் செபக் கருத்து பற்றி, காணொளிச் செய்தியில் விவரித்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வேகமாக மாறிவரும் இன்றைய உலகில், பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் இன்றையக் குடும்பங்கள் பாதுகாக்கப் படவேண்டும் என்பதற்காக, கடவுளை மன்றாடுவோம் என்று வலியுறுத்தினார்.

வாழ்வில் தொடர்ந்து இடம் பெற்று வரும் மாற்றங்களால், பெற்றோர், சில வேளைகளில் தங்கள் பிள்ளைகளுடன் விளையாட மறந்துவிடுகின்றனர் என்றும், இத்தகைய இன்னல்களிலிருந்து குடும்பங்கள் மீள்வதற்குரிய வழிகளைக் காண, திருஅவை, குடும்பங்களுக்கு உதவ வேண்டும் என்றும், அச்செய்தியில் கூறியுள்ளார், திருத்தந்தை.

பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ளும் குடும்பங்கள், அவற்றை மேற்கொள்வதற்கு, குடும்பங்களின் அருகாமையில் இருந்து, திருஅவை, அவற்றை ஊக்குவிக்கவேண்டும் என்றும், திருத்தந்தை கேட்டுக்கொண்டுள்ளார்.



இன்றைய மனித சமுதாயம் எதிர்கொள்ளும் சவால்களோடு தொடர்புடைய கருத்துக்களுக்காக, ஒவ்வொரு மாதமும், திருத்தந்தையர் செபக் கருத்து ஒன்றை வெளியிட்டு, அக்கருத்துக்காகச் செபிக்குமாறு, உலக கத்தோலிக்கர் அனைவருக்கும் அழைப்பு விடுத்து வருகின்றனர்.

திருத்தந்தையரின் செபக்கருத்தை, இயேசு சபையினர் நடத்தும், உலகளாவிய திருத்தூது செப வலைத்தள அமைப்பு, 'திருத்தந்தையின் காணொளி' என்ற ஊடகவடிவில், ஒவ்வொரு மாதமும் வெளியிட்டு வருகிறது.

### இறையரசின் இரகசியங்கள் எளியோருக்கே வெளிப்படுத்தப்படுகின்றன

மேலும், சோர்வுற்றிருப்போர், மற்றும், ஒடுக்கப்பட்டிருப்போருக்கு இறைவன் வழங்கும் ஆறுதல் என்பது, உளவியல் சார்ந்ததோ, பொருளுதவி சார்ந்ததோ அல்ல, மாறாக, நற்செய்தியைப் பெறுவதிலும் புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதிலும் கிட்டும் மகிழ்ச்சியே ஆகும் என கடந்த ஞாயிறு மூவேளை செப உரையில் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இறையரசின் இரகசியங்களை எளியோருக்கு வெளிப்படுத்தியதற்காக தந்தையாம் இறைவனை முதலில் புகழும் இயேசு, இரண்டாவதாக, தனக்கும் தந்தைக்கும் உள்ள தனிப்பட்ட உறவை வெளிப்படுத்துகிறார், மூன்றாவதாக, நாமும் தந்தையை நாடிச்சென்று ஆறுதலைப் பெறுமாறு அழைப்பு விடுக்கிறார் என, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தங்களுக்கு எல்லாம் தெரியும் என, தங்கள் இதயங்களை மூடி வைத்திருக்கும் ஞானிகளும் அறிஞர்களும் இறையரசின் இரகசியங்களை பெறமுடியாத வேளையில், இறைவனில் நம்பிக்கைக் கொண்டு தங்கள் இதயங்களை திறந்து வைத்திருக்கும் எளியோர் அந்த இரகசியங்களைப் பெறுகின்றனர், அவர்களுக்கே அவை வெளிப்படுத்தப்படுகின்றன என்றார். இறையன்பு, மற்றும், நற்செய்தி வழங்கும் பேறுகளின் முன்மாதிரியாக இருக்கும் இறைமகன் இயேசு, செல்வம் படைத்தோரையும் அதிகாரத்தில் இருப்போரையுமே உயர்த்திப்பிடிக்கும் இன்றைய உலகில், மனித சமுதாயத்தை, புதிதாக கட்டியெழுப்பும் நற்செய்தியை ஏழைகளுக்கும் எளியோருக்கும் வழங்குபவராக அவர் வருகிறார் என மேலும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.

இரக்கச் செயல்களை ஆற்றவும், ஏழைகளுக்கு நம்பிக்கையின் நற்செய்தியை வழங்கவும் ஒவ்வொரு கிறிஸ்தவரும் அழைக்கப்பட்டுள்ளார், அதன் வழியாக மனித சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் மகிழ்ச்சியை, ஏழை எளியோருக்கு தருவதே, இயேசு வழங்கும் ஆறுதல் எனவும் எடுத்துரைத்து, தன் மூவேளை செப உரையை வழங்கினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# இந்திய சமுதாயம் பெண்களை மதிக்க வேண்டும்

**வத்திக்கான்**. இந்திய சமுதாயம் பெண்களையும், அவர்களின் முக்கியத்துவத்தையும் மதிப்பதற்கு கற்றுக்கொள்ள வேண்டும் என்று, மகேர் (Maher) அமைப்பின் இயக்குனரான அருள் சகோதரி லூசி குரியன் அவர்கள் கூறினார்.

கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் சிறார்க்கென, Maher என்ற அமைப்பை உருவாக்கி நடத்திவரும் அருள்சகோதரி குரியன் அவர்கள், இந்தியாவில், பாலியல் பாகுபாடு காரணமாக, கடந்த ஐம்பது ஆண்டுகளில், ஏறத்தாழ 4 கோடியே 58 இலட்சம் பெண்கள் காணாமல் போயுள்ளனர் என்று கூறும் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் அறிக்கை ஒன்றைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்திய சமுதாயத்தில் மகன்களே குடும்பத்திற்கு வருமானம் கொணர்பவர்கள் என்ற எண்ணம் பரவலாக நிலவுகிறது என்றும், வரதட்சணை சுமையால் மகள்கள் வருங்காலத்தில் கடனாளியாக்கிவிடுவார்கள் என, பல பெற்றோர் மத்தியில் அச்சம் நிலவுகின்றது என்றும் அச்சகோதரி கூறினார்.

இந்தியாவில் குழந்தை பிறப்பதற்கு முன்னரே பாலினத்தைக் கண்டுபிடிப்பது தடைசெய்யப் பட்டிருந்தாலும், குடும்பங்களில் மகன்களே அதிகம் விரும்பப்படுவதால், 2013ம் ஆண்டிலிருந்து 2017ம் ஆண்டுவரை, 4,00,600 பெண் குழந்தைகள் கருவிலேயே கலைக்கப்பட்டுள்ளனர் என்று, ஓர் அறிக்கை கூறுகிறது. (UCAN) என்பதை வெளிப்படுத்தினார் அருள் சகோதரி லூசி குரியன்.

பெண்ணுரிமை பேணப்பட வேண்டும் என்பது இவரின் முழக்கமாக உள்ளது.




இந்தியாவில் பெண்ணுரிமைக்காக போராட்டம் (AFP or licensors)

# சந்திப்பு கலாச்சாரத்தை வளர்க்கும் புதிய மறைக்கல்வித் தொகுப்பு

**வத்திக்கான்**: நாம் வாழும் டிஜிட்டல் கலாச்சாரம் மற்றும் உலகமயமாக்கப்பட்ட கலாச்சாரம் ஆகியவற்றின் பின்னணியில் நமக்குப் பயன்படும் மறைக்கல்வித் தொகுப்பை ஜூன் 25, கடந்த வியாழனன்று திருப்பீடம் வெளியிட்டுள்ளது.

### புதிய மறைக்கல்வித் தொகுப்பு வெளியீடு

3 பகுதிகளையும் 12 பிரிவுகளையும் கொண்ட இந்த தொகுப்பை புதியவழி நற்செய்தி அறிவிப்புப்பணி திருப்பீட அவையின் தலைவர் பேராயர் Rino Fisichella மற்றும் இந்த அவையின் செயலர் பேராயர் Octavio Ruiz Arenas ஆகியோர் செய்தியாளர்கள் கூட்டத்தில் வெளியிட்டனர்.

1971-ஆம் ஆண்டிலும் 1997-ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்ட மறைக்கல்வித் தொகுப்புக்களில் இன்றையச் சூழலுக்கு ஏற்ற மாற்றங்களைப் புகுத்தி புதியவழி நற்செய்தி அறிவிப்புப்பணி திருப்பீட அவை உருவாக்கியிருந்த இந்தப் புதியத் தொகுப்பினை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த மார்ச் மாதம் அங்கீகரித்தார்.

### "திருஅவையின் மறைபரப்புப்பணியில் மறைக்கல்வி"

”திருஅவையின் மறைபரப்புப்பணியில் மறைக் கல்வி” என்ற தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள முதல் பகுதியில் நமது நம்பிக்கைக்கு சாட்சிகளாக விளங்கும் வகையில் மறைக்கல்வி ஆசிரியர்களை உருவாக்கும் வழிகள் கூறப்பட்டுள்ளன. மறைக்கல்வியை மற்றவர்களுக்குச் சொல்லித்தரும் இவ்வாசிரியர்கள் தங்களிடம் கற்போருடன் பணிவுடன் பயணித்து தாங்கள் சொல்லித்தரும் மறையின் உண்மைகளை தங்கள் வாழ்வால் பறைசாற்ற அழைக்கப்பட்டுள்ளனர் என்பதை இப்பிரிவு வலியுறுத்துகிறது.

### "மறைக்கல்வி வழிமுறைகள்"

”மறைக்கல்வி வழிமுறைகள்” என்று தலைப்பிடப்பட்டுள்ள இந்நூலின் இரண்டாம் பிரிவில் மறைக்கல்வியின் ஆரம்பம் குடும்பங்களில் நிகழவேண்டும் என்றும் பெற்றோர் மற்றும் முதியோரின் சாட்சிய வாழ்வு குழந்தைகளைக் கிறிஸ்தவ மறையில் வளர்க்க உதவும் தலைசிறந்த கருவி என்றும் கூறப்பட்டுள்ளது.

வரவேற்றல், அனைவரையும் உள்ளடக்குதல், அவரவர் தனித்துவத்தை ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவை மறைக்கல்வி வழிமுறைகளின் முக்கிய அம்சங்கள் என்று கூறும் இப்பகுதியில் நாடு விட்டு நாடு குடிபெயர்ந்து வாழ்வோரை எவ்வாறு மறைக்கல்வி முறைகளில் இணைப்பது என்ற கருத்தும் கூறப்பட்டுள்ளது.

### "தனிப்பட்ட தலத்திருஅவைகளில் மறைக்கல்வி"

”தனிப்பட்ட தலத்திருஅவைகளில் மறைக் கல்வி” என்ற தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள மூன்றாம் பிரிவில் ஒவ்வொரு பங்கிலும் வளர்க்கப்படும் குழும உணர்வு மறைக்கல்வியை வளர்க்கும் முக்கிய சூழல் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

பள்ளிகளில் சொல்லித்தரப்படும் மறைக் கல்விப் பாடங்கள் நிறுவனம் என்ற மனநிலையிலிருந்து மாணவ மாணவியரை சமுதாயக் குழுமம் என்ற மனநிலைக்கு அழைத்துச் செல்லவேண்டும் என்று இப்பிரிவில் கூறப்பட்டுள்ளது.

-ஆர்.கே.

## திருவிவிலிய ஞாயிறு- 12-07-2020

2020-ஆம் ஆண்டுகான திருவிவிலிய ஞாயிறு இன்று 12-07-2020 கொண்டாடப்படுகிறது. “இதயப்பூர்வமான திருவிவிலய வாசிப்பு” என்ற மையக்கருத்தில் கொண்டாடப்பனும் இத்தினத்தைப் பங்குகளில் முன்புபோல் கொண்டாட முடியாத சூழல் இருந்தாலும், இல்லங்களில் குடும்பமாக விவிலிய அரங்கேற்றம் செய்து, சிறப்பு ஆராதணை நிறைவேற்றி, திருவிவிலியத்தில் உறைந்திருக்கும் இறைவனை போற்றுவோம்.

இறைவார்த்தையை அனுதினமும் இதயப் பூர்வமாக வாசித்து, தொடர்ந்து இறைவனோடு ஆழமாக உறவு கொண்டு வாழ முற்படுவோம்.




# திருவிவிலிய ஞாயிறு செய்தி 2020 இதயப்பூர்வமான திருவிவிலிய வாசிப்பு

**சென்ற வாரத் தொடர்ச்சி:**

### தூய ஆவியாரில் வரும் உயிருள்ள இறைவாரைத்தை

இறைவார்த்தைக்கும் தூய ஆவியாருக்குமிடையே நெருங்கிய உறவு உள்ளது. கபிரியேல் தூதர் மரியாவுக்குத் தோன்றி, உன்னத கடவுளின் தாயாகும் பேற்றினைப் பற்றி; அவருக்கு அறிவித்தார் (லூக் 1:32). அப்போது மரியா, "இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!" என்றார்.அதற்கு வானதூதர், "தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும் ..." என்று கூறுகின்றார் (லூக் 1:35). இவ்வாறு, தொடக்க முதல் இருந்த வார்த்தையானவர் (யோவா 1:1), படைப்பனைத்தையும் உண்டாக்கிய வார்த்தையானவர் (யோவா 1:3), தூய ஆவியின் வல்லமையால் மனுவுரு எடுத்து (யோவா 1:14), "இம்மானுவேலாக" நம்மிடையே குடிகொண்டார் (மத் 1:23).

இன்றும் திருப்பலியில் இந்நிகழ்வு தொடர்ந்து நடைபெறுகின்றது. குருவானவர், அப்ப இரச காணிக்கைகள் மீது, தூய ஆவி இறங்கி வரவேண்டும் என்று அர்ச்சிப்பு இறைவேண்டைலை ஒப்புக்கொடுக்கும்போது, தூய ஆவி சாதாரண அப்பத்தையும் இரசத்தையும் இயேசுவின் திருவுடலாகவும் திருஇரத்தமாகவும் மாற்றுகின்றார். இதைப்போலவே, தூய ஆவியின் வல்லமையால், வார்த்தையான இறைவன் மரியா வழியாக மனுவுரு எடுக்கின்றார். ஆகவே, தொடக்கத்திலிருந்த வார்த்தையான கிறிஸ்து இன்றும் இறைவார்த்தையில் பிரசன்னமாகி நம்மிடையே குடிகொள்கின்றார். எனவே, தூய ஆவியார் இருக்கின்ற இடத்தில் இறைவார்த்தை உள்ளது. அதைப்போலவே, இறைவார்த்தை உள்ள இடத்தில் தூய ஆவியார் இருக்கின்றார்..

தூய ஆவியாரின் வல்லமையால், இறைவார்த்தை மரியாவில் நுழைந்து அவரோடு தனிப்பட்ட உறவை ஏற்படுத்துகின்றது. மரியாவைப்போல, இறைவார்த்தை நம்மிலும் மனுவுருவாக, தூய ஆவியாரை வரவேற்க நமது இதயங்கள் எப்போதும் திறந்திருக்க வேண்டும். மரியா வானத் தூதரிடம் கூறியவாறு, "உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று நாமும் கூறவேண்டும் (லூக் 1:38). இறைவார்த்தை நம்மில் செயல்படும்போது, அதன் வல்லமை நம்மில் பொழியப்படுகின்றது. அப்போது நமது வாழ்க்கை கடவுளால் தொடப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு, புதிய ற்றலால் நிறப்பப்படுகின்றது.

குடுவையில் உள்ள நறுமணம் பரவவேண்டும் என்றால் அது திறக்கப்படவேண்டும். இல்லையென்றால் நறுமனத்தை நாம் நுகர முடியாது. இறைவார்த்தையும் இவற்றைப் போன்றதே. திருவிவிலியத்தில் மறைந்திருக்கும் புதையல்களை நாம் கண்டுபிடிக்க வேண்டுமென்றால் தூய ஆவியாரின் துணை




நமக்கு வேண்டும். மரியா இறைவார்த்தையை கேட்டு அவற்றை இதயத்திலே நிறுத்தி சிந்தித்ததைப் போன்று, நாமும் இறைவார்த்தையை இதயப்பூவமாக படித்து, அவற்றை சிந்தித்து செயல்படுவோம். அப்போது, கடவுளின் திருவுளத்தை அறிந்து அவற்றை வாழ்வாக்க தூய ஆவியார் நமக்கும் ஆற்றல் அளிப்பார்.

### முடிவுரை

"கிறிஸ்துவராய் இருப்பது என்பது ஒரு அறநெறி சார்ந்த முடிவோ அல்லது மதிப்புமிக்க ஒரு கருத்தியலை பின்பற்றுவதோ அல்ல. மாறாக, உயிர்த்த இயேசுவுடனான நமது அன்றாட சந்திப்பை மையப்படுத்தியது. அத்தகைய சந்திப்பு நமது வாழ்க்கைப் பாதைக்கு புதிய எல்லையையும் தெளிவான பாதையையும் காட்டுகின்றது." கிறிஸ்துவ வாழ்வு என்பது மேலோட்டமான ஒன்று அல்ல. மாறாக அது உறவுகளால் கட்டி எழுப்பப்படுகின்றது. நம்முடன் தனிப்பட்ட விதத்தில், மிகவும் நெருக்கமாக, உறவாட விரும்பும் உயிர்த்த இயேசுவுடன், நாம் உறவுகொள்ள முயற்சிப்போம்.

**சிந்தனைக்கு**

*1.கடவுளோடு நாம் எவ்வாறு உறவாடுகின்றோம்? மேலோட்டமாகவா அல்லது தனிப்பட்ட விதத்திலா? திருஅவை மற்றும் நமது கிறிஸ்துவ வாழ்வில் இதன் முக்கியத்துவம் என்ன?*

*2. திருவிவிலித்தை வாசிக்கும்போது இயேசுவுடன் நாம் தனிப்பட்ட மற்றும் நெருங்கிய உறவில் நுழைகின்றோம். இயேசுவுடனான சந்திப்பை இன்னும் உயிரோட்டமுள்ளதாக மாற்ற நமது திருவிவிலிய வாசிப்பு எவ்வாறு அமையலாம்?*

# இதயப்பூர்வமாக இறைவார்த்தை வாசிப்போம்

பொதுக்காலம் பதினைந்தாம் ஞாயிற்றுக் கிழமையில் இருக்கும் நமக்கு இன்றைய நாளில் நாம் படிக்கக்கேட்ட வாசகங்கள் தரும் சிந்தனை ‘வாழ்வு தரும் இறைவார்த்தை’ என்பதாகும். எனவே இந்த வேளையில் இறைவனின் வார்த்தை எந்தளவுக்கு வாழ்வுதரக்கூடியதாக இருக்கின்றது என்று சிந்தித்துப் பார்ப்போம்.

தொடக்க நூலில், கடவுள் தம் வாரத்தைகளால் இவ்வுலகை நிரப்பினார் என்று வாசிக்கிறோம். அவரது வார்த்தை வாழ்வு தரும் ஆவியைக் கொண்டுள்ளது. நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகளும் அவரிடமே உள்ளன என்று அன்று சீடர்களும் அறிக்கையிட்டனர். ஆம். கடவுளின் வார்த்தை நிலைவாழ்வுக்கு நம்மை இட்டுச் செல்வபவையாகும்.

நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் இயேசு விதைப்பவர் உவமையைக் குறித்துப் பேசுகின்றார். விதைப்பவர் உவமையானது நான்கு விதமான நிலங்களைக் குறித்துப் பேசுகின்றது. இந்த நான்கு வகையான நிலங்களில் நாம் எந்த வகையைச் சார்ந்தவர் என அறிய முற்படுவோம். முதலாவதாக வழியோர நிலம். இந்த நிலத்தில் விழுகின்ற விதைகள் யாவுமே முளைத்து வளர்வதற்கான எந்தவிதச் சாத்தியக் கூறுகளும் இல்லாதவை. ஏனென்றால், இவை வழியில் போவோர் வருவோரால் மிதிபடும்; வானத்துப் பறவைகளால் கொத்தி உண்ணப்படும். இத்தகைய நிலத்தைப் போன்றே மனிதர்களும் ஒருசிலர் இருக்கிறார் கள். அவர்கள் இறைவார்த்தைக்கு செவிகொடுப்பதே கிடையாது.

.

அடுத்ததாக வருவது மிகுதியாக மண் இல்லாப் பாறை நிலம். இத்தகைய நிலங்களில் விழுகின்ற விதைகள் தொடக்கத்தில் நன்றாக வளரும். ஆனால் அடித்தளம் சரியாக இல்லாததால் அவை விரைவிலே கருகிவிடும். இத்தகைய பாறைநிலத்தைப் போன்ற மக்களும் இருக்கிறார்கள். அவர்கள் இறைவார்த்தையைக் கேட்டாலும், அது தங்களுடைய வாழ்வை ஊடுருவ அனுமதிக்கமாட்டார்கள். அதனால் அவர்கள் எந்த விதப் பயனும் தராமலே போய்விடுகிறார்கள்.

மூன்றாவதாக வருவது முட்புதர் நிலம். இந்த நிலத்தில் விழுகின்ற விதைகள் யாவுமே நன்றாக வளரும். ஆனால் அதே நேரத்தில் முட்கள் அவற்றை நெருக்க நெருக்க அவை பலன்தராமலே போய் விடும். இத்தகைய நிலம் போன்று நிறைய மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இறைவார்த்தையையும் முக்கியம், உலக காரியங்களும் முக்கியம். இப்படிப்பட்ட மக்கள் கடவுள், செல்வம் என இரண்டையும் போட்டுக் குழப்பிக்கொண்டு எதற்கும் உண்மையில்லாமல் இருப்பார்கள்.

ஆகையால் நாம் வழியோர நிலம் போன்றோ, பாறை நிலம் போன்றோ அல்லது முட்செடி நிலம் போன்று இருந்து கடவுளை மறந்து, உலக வாழ்க்கையில் மூழ்கிப் போனால் நம்மால் உண்மையான – நிம்மதியான வாழ்வை - வாழ்ந்துவிட முடியாது.

யாராரெல்லாம் கடவுளது ஆட்சியை, அவருக்கு ஏற்புடையவற்றை நாடுகிறார்களோ அவர்கள்தான் நல்ல நிலம் போன்றவர்கள். அத்தகையதோரே முப்பது மடங்காக, அறுபது மடங்காக, நூறு மடங்காக பலன்தருவார்கள்.

*-சவரிநாதன், சுங்கை பட்டாணி*

**பொதுக்காலம் 15-ஆம் ஞாயிறு**

எசா 55: 10-11
திபா 65: 9abc. 9d-10. 11-12. 13
உரோ 8: 18-23
மத் 13: 1-23

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் 3**